**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

**Deposition of Witness**

Mcop 407 of 2021

ம.சா.2 ராமானுஜ கண்ணன்

| | | |
|---|---|---|
| Name | : | ராமானுஜ கண்ணன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 24.9.25 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது ஆலங்குளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் பேரில் ஆஜராகியுள்ளேன். ஆலங்குளம் காவல்நிலைய குற்ற எண். 433/20 வழக்கின் முதல் தகவல் அறிக்கை, பார்வைமகசர், மற்றும் குற்ற இறுதியறிக்கை அடங்கிய ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் மூ.த.சா.ஆ1 வரிசை. விபத்து சம்பந்தமாக மாடசாமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மாடசாமி என்பவர் விபத்து நடந்த இடத்தில் இல்லை. அவர் அவருடைய உடன் பிறந்த தம்பி சமுத்திரபாண்டிக்காக புகார் கொடுத்துள்ளார். சமுத்திரபாண்டியனிடம் எந்த ஒரு வாக்குமூலமும் வாங்கப்படவில்லை. விபத்தானது இரு இருசக்கர வாகனம் மோதி ஏற்பட்டுள்ளது. டி.என்.76.பி.3004 என்ற பேசன் புரோ வாகனம் கியருடன் கூடிய வாகனம். அந்த இருசக்கர வாகனத்தை சமுத்திர பாண்டி ஒட்ட அவரது மனைவி பின்னால் அமர்ந்து திருநெல்வேலி முதல் பாவர்சத்திரம் வரும் வழியில் ஆலங்குளம் ராமர்கோவில் வளைவிற்கு முன்பு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்ற போது முன்னால் டி.என்.76.எல்.4030 என்ற டி.வி.எக்ஸ் ஹவிடியூட்டி என்ற வாகனத்தை பலவேசமுத்து என்பவர் ஒட்டி சென்றபோது பின்னால் வந்த சமுத்திர பாண்டி

மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபத்தில் பலவேசமுத்து என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. மாதிரிவரைபடத்தின்படி விபத்தானது இடது ஒரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பலவேசமுத்து மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தன் மீது எந்தவிதமான குற்றமும் இல்லை என பலவேசமுத்து கடந்த 22.10.2020 ம் தேதி ஒருபுகாரை காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பியுள்ளார். அந்த மனு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பலவேசமுத்து அவரது சொந்த ஊரான ஆண்டிபட்டிக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது. ஆண்டிபட்டி விலக்கிற்கும், விபத்துநடந்த இடத்திற்கும் 500 மீட்டர் தொலைவு இருக்கும். பலவேசமுத்து மீது குற்ற வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எஸ்டிசி.1444/2022 ன்படி நிலுவையில் உள்ளது.

2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

முதல் தகவல் அறிக்கை பலவேசமுத்து மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. பலவேசமுத்து திடீரென எவ்வித சிக்னலும் இல்லாமல் வலதுபக்கம் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பின்னால் வந்த வாகனத்தின் மீது பலவேசமுத்து ஓட்டி சென்ற வாகனம் மோதிவிட்டது என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் பலவேசமுத்து என்றால் சரிதான். பலவேசமுத்து 34 நாட்கள் கழித்து தன் மீது தவறு இல்லை என காவல்துறை கண்காணிப்பாளரிடம் காலதாமதமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

(ஒம்)எஸ்.முருகவேல்
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.